பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 04 2026 SATURDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரின் மொரீசியஸ் பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

2. அமெரிக்கா - ஈரான் இடையே அறிவிக்கப்பட்டுள்ள சண்டை நிறுத்தம், மேற்காசிய நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு வழிவகுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. 20 ஆயிரத்து 400 டன் சமையல் எரிவாயுவுடன் இந்திய சரக்கு கப்பல் இன்று Hormuz நீரிணையை கடந்தது.

4. நேபாளத்தில், இந்தியா நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் Barabanki - Bahrich நான்கு வழி சாலை இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை - தில்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>>><<<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மேற்கொண்ட மொரீசியஸ் பயணத்தின் மூலம் இருதரப்பு உறவுகள் மேம்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மருத்துவம், கல்வி, கட்டமைப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே நிலையான வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் மொரீசியஸ் தலைவர்களுடன் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சுக்கள் நடத்தியதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

அமெரிக்கா - ஈரான் இடையே அறிவிக்கப்பட்டுள்ள சண்டைநிறுத்தம், மேற்காசிய நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு வழிவகுத்துள்ளதாக வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் Dr. Masjid Bin Abdullah-வுடன் காணொலி வாயிலாக உரையாடிய அவர், போர் சூழலிலும் சவுதி அரேபிய மக்கள் அளித்து வரும் ஒத்துழைப்பை பாராட்டுவதாக குறிப்பிட்டார்.

சவுதி அரேபியாவில் உள்ள இந்திய மக்களை பாதுகாப்பதற்கு எடுத்துவரும் முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

அந்நாட்டின் மீதான தாக்குதல்களை இந்தியா கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இருதரப்பு வர்த்தகத்தை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்ட வர, ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்வது குறித்தும் தாம் பேசியதாக திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>>><<<<<<

மேற்காசியாவில் உள்ள இந்திய கப்பல்களும், மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அங்குள்ள இந்திய தூதரகங்கள் மேற்காசிய பகுதிகளில் வசிக்கும் இந்தியர்களிடம் தொடர்பில் உள்ளதாகவும், அவர்களுக்கு தேவையான அறிவுரைகளை அவ்வப்போது வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு சமையல் எரிவாயுவை ஏற்றி வந்த, Jag Vikram சரக்கு கப்பல் இன்று பாதுகாப்பாக, Hormuz நீரிணையை கடந்துள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த கப்பலில் 20 ஆயிரத்து 400 டன் சமையல் எரிவாயு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், 24 மாலுமிகள் உள்ளதாகவும், இம்மாதம் 15ஆம் தேதி, இந்தக் கப்பல் மும்பை வந்து சேரும் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள 2 ஆயிரத்து 225 இந்தியர்களை பாதுகாப்பாக அர்மேனியா மற்றும் அஜர்பைஜான் வழியாக, தாயகம் அழைத்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 951 இந்திய மாணவர்களும், 662 இந்திய மீனவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

>>>>>><<<<<<

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தங்குதடையின்றி விநியோகிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக பெட்ரோலிய அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேற்று மட்டும் 51 லட்சத்து 50 ஆயிரம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை பதுக்குவது மற்றும் கள்ளச்சந்தை விற்பனையை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 400-க்கு மேற்பட்ட இடங்களில் நேற்று சோதனை நடத்தப்பட்டதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில், 5 கிலோ சிலிண்டர்கள் வெளிச்சந்தைகளில் போதிய அளவு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், எண்ணெய் நிறுவனங்களும், சமையல் எரிவாயு விநியோகஸ்தர்களின் அலுவலகங்களில் திடீர் சோதனை மேற்கொண்டதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவை தேர்தலை பார்வையிட்ட 22 நாடுகளின் 38 பிரதிநிதிகள், இந்திய தேர்தல் நடைமுறைகளை பாராட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்தலுக்கான ஏற்பாடுகள் மற்றும் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வு பணிகளையும் அவர்கள் பாராட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைமுறைகளை பார்வையிட தங்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பிற்கு மகிழ்ச்சி தெரிவித்த சர்வதேச குழுவினர், வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் வாக்குப்பதிவு நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையும் அவர்கள் பாராட்டியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

*அதிக அளவில் மக்கள் நம்பிக்கையுடன் காத்திருந்து தங்களது வாக்குகளை செலுத்தியது, ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளதாகவும், பிரதிநிதிகள் குழுவைச் சேர்ந்த திருமதி. குரோஷியா ஃபார்கஸ் தெரிவித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சிசிடிவி மூலம் வாக்குப்பதிவு கண்காணிக்கப்படுவதையும் சர்வதேச பிரதிநிதிகள் குழுவினர் பாராட்டியுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தேர்தல் ஆணையத்தின் சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் முன்னோடி திட்டத்தின் கீழ், தேர்தல் நடைமுறைகளை இவர்கள் பார்வையிட்டனர்.*

*>>>>>><<<<<<*

*இனி தேர்தல் களம்…*

*(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)*

*தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது தருமபுரி மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.*

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு – 2 min. 40 sec. செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*நேபாளத்தில், இந்தியா நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள Barabanki - Bahrich நான்கு வழி சாலை மூலம் இருநாட்டு வர்த்தக உறவுகள் மேம்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*இந்த சாலை மூலம் உத்தரபிரதேச மாநிலத்தின் Rubaidiha நேபாளத்தின் Nepalgung-ம் இணைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.*

*மேம்படுத்தப்படவுள்ள இந்த நெடுஞ்சாலை மூலம் இருநாடுகளுக்கு இடையேயான வணிகம், பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்றும் வணிக வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிராக, டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

இப்போட்டி, சென்னையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் பஞ்சாப் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

நியூ சண்டிகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 219 ரன் எடுத்தது.

220 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி, 18 புள்ளி ஐந்து ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 223 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

>>>>>>END<<<<<<<